OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.3.2020

Accepted: 23.3.2020

Published: 01.04.2020

Citation:
Devi, R. (2020). "An Introduction to the Second Veeranaikardiary." *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 54–62.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2413

*Corresponding Author:
deviappu3@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# An Introduction to the Second Veeranaikar Diary

**Dr. R. Devi***
*Department of Tamil, Madras University Arts and Science College*
*Nemeeli, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-1173-9359

**Abstract –** Human life is subject to change over time. In that way, man made a habit of taking note of events in everyday life. This was later called the diary. The forerunner of the diaries is the Greek memorandum known as "Ephemerides". The diary-writing system developed in the 18th century among Tamils. Anandarangappillai, who was the head of the French government in Puducherry, records the political and social situation in Puducherry in the 18th century. Many have since written a dairy, In that order Rajagopala Nayakar's son ll Veeranaikar, who played the second lord (Nayinar) post in the French court's both during the French rule of Puducherry in the late 18th century, wrote a dairy from 1778 to 1792. The introduction of ll Veeranayakar as well as information about Puducherry, history of Veeranaaykar's dairy, Hints about printer of Veeranaikar's diary, process of process printing information's explained in this article.

**Key Words:** History, Puducherry history, History of dairy, Printing work of diary, Introduction of ll Veeranaikar.

## References

1. Orsay, M. Gopalakrishnan Orche, ll Veeranaikar Diary, Chennai, 1992.
2. Dharmarajan, N. *What is History?*, Aalaikal Publications, Chennai, 2006.

# இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு – ஓர் அறிமுகம் (1778–1792)

*முனைவர் இரா. தேவி*
தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழக கலை அறிவியல் கல்லூரி, நெமேலி

***ஆய்வுச் சுருக்கம்*** *– மனித வாழ்க்கை காலத்திற்கேற்றவாறு மாறக்கூடியதாகும். அந்தவகையில் மனிதன் அன்றாட வாழ்க்கையில் நிகழக்கூடிய நிகழ்வுகளைக் குறிப்பு எடுக்கும் வழக்கத்தை மேற்கொண்டான். இது பின்னாளில் நாட்குறிப்பு என்றழைக்கப்பட்டது. மேலைநாட்டவரிடம் உருவான நாட்குறிப்பு எழுதும் முறை தமிழரிடையே 18-ஆம் நூற்றாண்டில் முகிழ்த்தது. புதுச்சேரி பிரெஞ்சு அரசின் தலைமைத் துபாசியாக இருந்த ஆனந்தரங்கப்பிள்ளை 18-ஆம் நூற்றாண்டில் புதுச்சேரியில் நிகழ்ந்த அரசியல், சமுதாய நிலையைப் பதிவு செய்துள்ளார். இவரைத் தொடர்ந்து பலர் நாட்குறிப்பு எழுதியுள்ளனர். அந்த வரிசையில் 18-ஆம் நூற்றாண்டின் இறுதி காலக்கட்டத்தில் புதுச்சேரி பிரெஞ்சு ஆட்சிக்காலத்தில் பிரெஞ்சுக் கழகத்தின் சாவடி நீதிமன்றக் காவல் துறையில் இரண்டாவது நயினார் பதவியை வகித்த இராஜகோபால நாயக்கரின் மகன் இரண்டாம் வீராநாய்க்கர் 1778 முதல் 1792 வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். 8-ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டதும், புதுச்சேரி பற்றிய பல செய்திகள் அடங்கியதுமாக இரண்டாம் வீராநாய்க்கர் அறிமுகம், வீராநாய்க்கர் நாட்குறிப்பு கிடைத்த வரலாறு, வீராநாய்க்கர் நாட்குறிப்பு பதிப்பித்த ஆசிரியர் பற்றிய குறிப்பு, பதிப்புப் பணிபற்றிய செய்திகள் இவ்வாய்வுக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *புதுச்சேரி வரலாறு, நாட்குறிப்பு வரலாறு, நாட்குறிப்பு பதிப்புப் பணி, இரண்டாம் வீராநாய்க்கர் அறிமுகம், நாட்குறிப்புக் குறித்த செய்திகள்.*

## நாட்குறிப்பு தோன்றிய வரலாறு

ஒருவர் தன் வாழ்க்கையில் அன்றாடம் நிகழும் நிகழ்வுகளை பதிவுசெய்த நீண்டதொரு குறிப்பே நாட்குறிப்பாகும். அவ்வப்பொழுது நிகழ்ந்த நிகழ்வுகளை பதிவு செய்த போது நாள், மாதம், ஆண்டு மூன்றையும் பதிவு செய்துள்ளனர். நாட்குறிப்பு நாள், குறிப்பு என விரிகிறது. நாட்குறிப்பு நாட்காட்டி, நாளேடு குறிப்பு, குறிப்பேடு எனப் பல பெயரால் அழைக்கப்படுகிறது. நாட்குறிப்பு ஆங்கிலத்தில் Diary என்ற சொல்லால் அழைக்கப்படுகிறது. இலத்தின் மொழியில் உள்ள "Diarium" என்ற மூலச்சொல்லில் இருந்து பிறந்ததே 'Diary' என்பதாகும். அன்றாட நிகழ்வுகளை குறிப்பதால் இவை "டைரி" என அழைக்கப்படுகிறது. தமிழில் "ஆனந்தரங்கப்பப்பிள்ளை எழுதிய நாட்குறிப்பு சொஸ்த லிகித தினப்படி சேதி குறிப்பு என்ற பெயரால் அழைக்கப்பட்டது" "சொஸ்த" என்பது தெளிந்த அல்லது உரிமை உடைய என்ற பொருளைத் தருகிறது. "தினப்படிச்" சேதிக் குறிப்பு என்பது நாட்குறிப்பு எனும் பொருளைத் தருகிறது. நாட்குறிப்பின் முன்னோடியாகத் திகழ்வது "Ephemerides" என்று அழைக்கப்பெறும் கிரேக்கக் குறிப்பேடு ஆகும். ஒரு நாளில் நிலவக்கூடிய விண்மீன்களின் அமைப்பு பருவகால மாற்றங்கள், கிரேக்கர்களின் நிலை குறிப்பேடாகப் பதிவு செய்தனர்.மேற்கூறப்பட்டுள்ள குறிப்புகளின் வழி மக்கள் விவசாயம், உழவுத்தொழில்

போன்றவற்றை சிறப்பான முறையில் செய்து பயனடைவது மட்டுமின்றி, சமயவிழாக்களை அறிந்துக் கொண்டு சமயப் பழக்கவழக்கங்களை எம்முறையில் செய்தல் வேண்டும் என்பதை எடுத்துக்கூறும் குறிப்பேடாக கிரேக்க குறிப்பேடு திகழ்ந்தது. 12-ஆம் நூற்றாண்டில் சீனாவை ஆண்ட சங்வம்ச மன்னர்கள் தங்கள் காலத்தில் நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகள், கடல் வணிகம், பிற அரசத் தூதுவர்களுடன் கொண்ட தொடர்பு என பல செய்திகளை நாட்குறிப்பாகக் கொடுத்துள்ளனர்.

சங்வம்ச மன்னர்களின் நாட்குறிப்பினைத் தேடி தொகுத்து முறையானதொரு நாட்குறிப்பாக 1897-ஆம் ஆண்டு எதுவார் சாவேனே என்பவர் அறிமுகப்படுத்தினார். முகலாய மன்னர்களும் நாட்குறிப்பு எழுதியுள்ளனர். அந்தவகையில் நாட்குறிப்புகள் இன்று வரை எழுதப்பட்டு வருகின்றன.

### மேலை நாட்டவரின் நாட்குறிப்பு

உலக அளவில் புகழ்பெற்ற நாட்குறிப்புகள் பல இருப்பினும் குறிப்பிட்ட சிலரது நாட் குறிப்புகள்மட்டும் இன்றளவும் பேசப்பட்டு வருகின்றன. அவை.

1. சாமுவேல் பெப்பிஸ் நாட்குறிப்பு (1633-1703)
2. ஸ்விப்ட் ஜோனாதன் நாட்குறிப்பு (1667-1745)
3. பிராங்க் ஆன் நாட்குறிப்பு (1929-1945)

மேலை நாட்டவரிடையே இருந்த நாட்குறிப்பு எழுதும் வழக்கம் தமிழரிடையே 18-ஆம் நூற்றாண்டில்தான் பரவத் தொடங்கியது. தமிழில் நாட்குறிப்பு எழுதியவர்கள் பலர் இருப்பினும் ஆனந்தரங்கப்பப் பிள்ளையின் நாட்குறிப்பு குறிப்பிடத்தக்கச் சான்றாக உள்ளது. இவருக்குப் பின் பலர் நாட்குறிப்பு எழுதியுள்ளனர்.

1. ஆனந்தரங்கப்பிள்ளை (1709-1761)
2. திருவேங்கடப்பிள்ளை (1731-1791)
3. இரண்டாம் வீரநாய்க்கர் (1755-1823)

18-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்குறிப்பு தோன்றின. நாட்குறிப்பினை "தஸ்திரம்" என்ற பெயரில் வழங்கி வந்தனர். இச்சொல்லுக்கு பதிவேடு, ஆவணம் என்ற வேறு பொருளும் உண்டு.

### இரண்டாம் வீராநாயக்கர் நாட்குறிப்பு கிடைத்த வரலாறு

ஆனந்தரங்கப்பிள்ளை நாட்குறிப்பை நகலெடுத்த எதுவார் அரியேல் என்பவர் தான், வீராநாய்க்கர் நாட்குறிப்பையும் நகலெடுத்தார். பிரான்சு நாட்டை சேர்ந்தவரான எதுவார் அரியேல் 1844 முதல் 1854 வரை 10 ஆண்டு காலம் புதுச்சேரியில் அரசு பணி வகித்தார். தமிழ் மீது மிகுந்த ஆர்வம் கொண்டு இவர் தமிழ்பண்பாட்டினையும் வரலாற்றினையும்கொண்ட சுவடிகளை ஆராயும்பொருட்டு அவர் நிகழ்த்திய தேடலின்போது பல்வேறு வரலாற்றினைச் சொல்லும் ஆனந்தரங்கப்பிள்ளையின் நாட்குறிப்பினையும் திருவேங்கடப் பிள்ளையின் நாட்குறிப்பினையும் கண்டறிந்து எழுத்தர்களைக் கொண்டு படியெடுத்தார். இவரின் மறைவிற்கு பின் இவர் சேகரித்த நூல்கள், குறிப்புகள் எல்லாவற்றையும்பிரெஞ்சுஅரசு,பிரான்சில் உள்ள தேசிய நூலகத்தில் பாதுகாத்து வருகிறது.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நாட்குறிப்பு எழுதிய இரண்டாம் வீராநாய்க்கரின் நாட்குறிப்பினையும் கண்டறிந்து "வீராநாய்க்கர் தினசரிதை" என தலைப்பிடப்பட்டு, பிரெஞ்சு நூலகத்தில் இந்நூல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பதிப்பாசிரியர் சே மா. கோபாலகிஷ்ணன் தமிழ் ஆய்வுத் தொடர்பான நூல்களை சேகரிக்கும்போது பிரான்சு தேசிய நூலகத்தில் MS.Ind. 143 என்ற எண்ணுடைய கட்டுக் கோப்பினுள்ளே இருந்து எடுத்து "வீராநாயக்கர் தினசரிதை" என்ற பெயரை மாற்றி "இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு" என பெயரிட்டு

*1992-ஆம் ஆண்டில் நூலாக வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.*

### பதிப்பாசிரியர்

இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பைப் பதிப்பித்த ஆசிரியர் ஓர் சே.மா. கோபாலகிஷ்ணன் *1940-ஆம்* ஆண்டு புதுச்சேரியில் பிறந்தவர். இவர், பள்ளிப்படிப்பை புதுச்சேரியில் முடித்த இவர், புதுச்சேரி பிரெஞ்சு கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் மேல்படிப்புக்காக பாரிசு சென்று *1939-இல்* கிரெனோபிள் பல்கலைக்கழகத்தில் பௌதிகம் பொறியியல் பட்டம் பெற்றுள்ளார். பின்னர் *1964-இல்* தென் வியட்நாமில் பௌதிகப் பேராசிரியராக பணிப்புரிந்தார். தென் கிழக்காசியாவின் பல இடங்களில் பயணம் மேற்கொண்டு வரலாறு, மானிடவியல் துறையில் ஆய்வு செய்து வருகிறார்.

பாரிசில் கணிணிப் பொறியியலாளராகப் பணிபுரிந்து ஓர்சேவில் ஓய்வுபெற்ற இவர் பட்டினப்பாலையைப்பிரெஞ்சுமொழியில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். கோலாலம்பூர், தைப்பே, மொரிசியசு, பாரிசு, ஆகிய நாடுகளில் சிறப்பான ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியுள்ளார். "இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு *(1778-1792)*" என்னும் நூலை *1992* ஆம் ஆண்டு வெளியிட்டார். *18-ஆம்* நூற்றாண்டு புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவின் வரலற்றுச் செய்திகளைப் பதிவுசெய்துள்ளார்.

புதிய செய்திகள் அடங்கிய நூலாக ஆனந்தரங்கப்பிள்ளை வி-நாட்குறிப்பு பிற சொற்பத்தி ஆண்டு *(1751-1752)* என்ற நூலும் "ஆனந்தரங்கப்பிள்ளை வி-நாட்குறிப்பு ஆங்கிரச ஆண்டு *(1752-1753)*" என்ற நூலும் புதிய வரலாற்றுச் செய்திகளைப் பிரதிபலிப்பதாக உள்ளன. பதிப்பாசிரியர் நாட்குறிப்பு மூலத்தைச் செம்மையாகத் தமிழாக்கம் செய்துள்ளார். கருத்துப்புரட்சி என்பது நிகழ்ச்சிகளுக்குப் பொருள் முன் பின்னாகப் பிறழ்ந்து காணப்படுகிறது. மூலப்பதிப்பின் இடையே சில மாற்றங்களைச் செய்து அத்தியாயங்களாக நிகழ்வுகளைப் பிரித்து, தொகுத்துக் கூறியுள்ளார். மூலத்தில் உள்ள சில வார்த்தைகளுக்குப் பல பொருள் தருதல், புதுக்கருத்தைப் புகுத்துதல், கூற்றுகள் பிரெஞ்சியில் இருந்தால் ஆங்கிலம், தமிழில் மாற்றுதல் ஆங்காங்கே செய்யப்பட்டுள்ளன இவரின் செயல்பாடானது ஏன் நிகழ்ந்தது என்றால் நாட்குறிப்பினைப் படிப்பவர்கள் எளிமையாக உள்வாங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் அமைக்க வேண்டும் என்ற எண்ணமேயாகும்.

### வரலாறு

"வரலாறு என்பது மானுட வரலாறுதான். வரலாற்றில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று இடம், மற்றொன்று காலம். ஓரிடத்தில் ஒரு நிகழ்ச்சிதான் நிகழ முடியும். அது மறுபடியும் நிகழாது. ஏனெனில் காலம் பின் நோக்கிச் சென்று விடும். ஆயினும் ஒரே காலத்தில் பல நிகழ்ச்சிகள் பல்வேறிடங்களில் நிகழ்கின்றனவாயினும் அவை வெவ்வேறானவை" *(நா.தர்மராஜன், வரலாறு என்றால் என்ன?, ப.5).*

வரலாறு மானிட வர்க்கத்தின் எல்லா நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுவதில்லை. முக்கியமானவற்றை மட்டும்தான் அது குறிப்பிடும் என்பதற்கு இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்புச் சான்றாக அமைகிறது. ஒவ்வொரு வரலாற்றாய்வாளர்களாலும் நிகழ்ச்சிகளை ஏதோ ஒரு நோக்கிலிருந்து பார்ப்பதே சிறந்தது என கருதிய நிலையில் பிரெஞ்சிய ஆட்சியை அதிகப்படியாகவும் ஆங்கிலேய பிரெஞ்சியப் புரட்சியை, வலங்கை, இடங்கை சண்டையைப் பெருவாரியாகப் பதிவுச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வரலாற்றுப் பதிவுகளைப் பதிப்பிக்கும்பொழுது நிகழ்ச்சிகளைக் காலவரையறைப்படுத்தி எழுதுதல் என்பதொன்று. தொகுதிகளாகப்

பிரித்துத் தருதல் மற்றொன்று. வீராநாய்க்கர் இரண்டு நிலையில் முதல்நிலையினைக் கையாண்டுள்ளார். இவரின் நாட்குறிப்பினைப் பதிப்புச் செய்த பதிப்பாசிரியர் ஓர் சே.ம.கோபாலகிஷ்ணன் வரலாற்றைத் தொகுதிகளாகப் பிரித்து தருதல் முறையைக் கையாண்டுள்ளார்.

அரிஸ்டாடில்(Aristotle) என்னும் கிரேக்கப் பேரறிஞர் "நிகழ்ந்தது மறுபடி நிகழாது என்பது வரலாற்றின் தன்மை" என்றார் (நா. தர்மராஜன், வரலாறு என்றால் என்ன?, ப.6). நிகழ்ந்தது மாறாமல் கூறல்தான் வரலாறு. அதில் அறப்பொருள் கண்டு கற்போர்க்குப் போதிப்பது வரலாறும் அல்ல. வரலாற்றாய்வாளர்களின் வேலையும் அல்ல. வரலாற்றில் நிகழ்ச்சியைக் கூட்டி குறைத்துப் பெருக்கி வகுத்து வரலாற்றாய்வாளர் தன் விருப்பப்படி தன் சொந்த தேசம், சமயம் அதிகப்படியாக அமைத்து வரலாறு என்று கூறுதல் தவறான ஒன்றாகும். வரலாற்று நிகழ்வினைக் கற்போர்க்குக் கற்பனைச் செய்துகொள்ள விடுவதுடன் வரலாற்றாய்வாளர் தானும் தனது கருத்தை, தீர்மானத்தை, தீர்ப்புகளைக் கூற வேண்டும். அதுவன்றி மனம் போனப் போக்கில் வரலாற்றைத் திரித்துக் கூறுதல் சரியானப் பதிவாக இருக்காது. உண்மையானது இருட்டடிக்கப்படும். அவ்வேலையை இரண்டாம் வீராநாய்க்கர் அதிகப்படியாகக் கையாளவில்லை. இரண்டாம் வீராநாய்க்கர் தன் நாட்குறிப்பில் தனி மனிதனைவிடச் சமுதாயம் என்னும் கூட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து அக்கால நிகழ்வுகளால் ஏற்பட்ட நன்மை, தீமை சார்ந்த கருத்துகளை ஆராய்ந்து இதுவரை நிகழ்ந்துள்ளவற்றை வைத்துக் கொண்டு எதிர்காலத்தைத் தத்தம் விருப்பப்படி யுகித்துக் கொண்டு விடை தருபவராக இருந்துள்ளார். இரண்டாம் வீராநாயக்கரின் நாட்குறிப்பு அக்கால மனிதர்களின் செயற்பாடுகளையும் எண்ணங்களையும் அவற்றின் காரணங்களையும் விளைவுகளையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது. நாட்குறிப்பு எல்லா நிகழ்ச்களையும் குறிப்பதில்லை. முக்கியமானவற்றை மட்டும் அது குறிப்பிடும் விதத்தில் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் ஒருசில நிகழ்ச்சிகளை ஏதோ ஒரு நோக்கிலிருந்து பார்ப்பதே சிறந்தது எனக் கருதியதாகும்.

வரலாற்றில் நிகழ்ச்சிகளைக் கால வகைப்படுத்தி எழுதுதல் என்பதொன்று. மற்றொன்று அந்நிகழ்ச்சித் தொகுதிக்குப் பொருள் கற்பித்தல். இதில் முதல் நிலையை இரண்டாம் வீராநாய்க்கர் தன் நாட்குறிப்பில் கையாண்டுள்ளார். வரலாறு என்பது கணிசமான அளவில் எண்ணிக்கையுடன் சம்பந்தப்பட்டது. பசியும் நிர்வாணமும் ஒடுக்குமுறையும் மக்களுடைய இதயங்களைவாட்டின. இதுவே பிரெஞ்சுப் புரட்சிக்கு முக்கியமான தூண்டுகோலாய் இருந்தது. வரலாறு என்பது கணிசமான அளவில் எண்ணிக்கையுடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. பசியும் தண்டனையும் அடக்குமுறையும் மக்கள் இதயத்தை வாட்டின. இதுவே பிரெஞ்சுப் புரட்சிக்கு முக்கியமான தூண்டுதலாக இருந்தது. வரலாறு என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. வரலாற்று ஆசிரியர் நடத்துகின்ற ஆராய்ச்சி அவர் ஆராய்கின்ற கடந்த கால விவரங்கள் ஆகியவை இரண்டு அர்த்தங்கள் மேற்கூறிய சமூக நிகழ்வாக இருக்கிறது. நாட்குறிப்பு தனித் தன்மையானவற்றையும் குறிப்பிட்டவற்றையும் எடுத்தியம்புவதாக உள்ளது.

வரலாற்றை தொகுப்பாக மாற்றுவது சரியன்று. இருப்பினும் இரண்டாம் வீரா நாய்க்கர் நாட்குறிப்பு குறிப்பிட்ட சில செய்திகள் அடங்கிய வரலாற்றுத் தொகுப்பாக உள்ளன இஸ்லாமிய மன்னர்கள் சிலரின் கொடுஞ் செயல்களுக்கு இன்றைய இஸ்லாமியர்கள் பொறுப்பாக்கப்படுகின்றனர். வகுப்புவாத அரசியலுக்குத் துணை நிற்கும்

கருவிகளுள் ஒன்றாக வரலாறு மாற்றப்பட்டுவிட்டது. வரலாற்றுச்சான்றுகள்கண்டுபிடிக்கவில்லை மாறாக அவை உருவாக்கப்படுகின்றன.

## இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு

பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியில் ஆட்சி செய்த 18-ஆம் நூற்றாண்டின் இறுதி காலத்தில் 1778 முதல் 1792 வரை கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். இவருடைய நாட்குறிப்பில் புதுச்சேரி முற்றுகை, புதுச்சேரி கோட்டை குறித்த வருணனை, கடல் வாணிபம், இராணுவச் செய்திகள், நெசவுத்தொழில், கொலைக் குற்றத்திற்காக தண்டனை கொடுத்தல், இடங்கை வலங்கை மோதல் போன்ற பல செய்திகள் இந்நாட்குறிப்பில் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் வீராநாய்க்கர் பற்றிய முழுமையான தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை. பிறந்த ஊர், பிறந்த ஆண்டு என எந்தத் தகவலும் கிடைக்கபெறாத நிலையில் "இவரின் முன்னோர்களின் காலத்தையும் நாட்குறிப்பு எழுதிய காலத்தையும் கொண்டு இவர் 1755-ஆம் ஆண்டு பிறந்திருக்கக் கூடும் என ஊகிக்கப்படுகிறது "(ஓர்சே மா.கோபாலகிஷ்ணன், 1992: ப.xvii).

## இரண்டாம் வீராநாய்க்கர் பரம்பரை

பெருமாள் நாய்க்கர் (இரண்டாம் வீராநாய்க்கரின் கொள்ளுத்தாத்தா)

1. பதவிக்காலம் - 1700 முதல் 1741 வரை
2. பதவி-பிரெஞ்சுஅரசுதமிழ்மக்களுக்காக அமைத்த காவல்துறையில் இரண்டாம் நயினார் பதவியை வகித்தவர்.
3. ஆளுநர் - பிரான்சுவா மர்த்தேன்,

வீராநாய்க்கரின் கொள்ளுத் தாத்தாவான பெருமாள் நாய்க்கர் 1700-ஆம் பிரெஞ்சு அரசு நிறுவிய தமிழ் மக்களுக்கான நீதி வழங்கும் காவல் துறை மன்றத்தின் நயினார் என்ற தலைமை அதிகாரிக்கு, துணை அதிகாரியாக (இரண்டாம் நயினார்) பணியாற்றி பல வழக்குகளை விசாரித்துள்ளார். 1700 முதல் 1741 வரை 41 ஆண்டுக்காலம் இப்பணியினை வகித்து அரசுக்கும், மக்களுக்கும் சேவையை செய்துள்ளார்.

"18-ஆம் நூற்றாண்டில் "நயினார்" என்ற சொல் காவல்துறைத் தலைவருக்கு கூறப் பட்டது" என ஓர் சே.மா.கோபாலகிஷ்ணன் தன்னுடைய நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். 1741-ஆம் ஆண்டிற்கு பிறகு பெருமாள் நாய்க்கர் மறைவிற்கு பின் அவர் மகன் வீராநாயக்கர் இரண்டாம் நயினார் பதவியை வகித்தார்.

## வீராநாய்க்கர் (இரண்டாம் வீராநாய்க்கரின் தாத்தா)

1. பதவிக்காலம் - 1742 முதல் 1753 வரை
2. பதவி - இரண்டாம் நயினார்
3. ஆளுநர் - துப்ளெக்சு

வீராநாய்க்கர் நயினார் பதவியை 1741 (அ) 1742 முதல் 1753 வரை 12 ஆண்டு காலம் பணிப்புரிந்து சேவைகளை செய்த இவர் ஆனந்தரங்கப்ப பிள்ளையின் காலத்தில் வாழ்ந்தவர் என்பதால் ஆனந்தரங்கர் தன்னுடைய நாட்குறிப்பில் வீராநாய்க்கர் பற்றிய சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். வீரநாய்க்கர் காலத்தில் 1746-இல் சென்னையை பிரெஞ்சுக்காரர்கள் முற்றுகையிட்டு பிடித்துக் கொண்டது. 1748-இல் ஆங்கிலேயர்கள் புதுவையைமுற்றுகையிட்டது,அயிதராபாத்தில் புய்சி வெற்றி பெற்றது. இந்தியாவில் துப்ளெச்சின் சிறப்பான அரசியல் செயல்பாட்டால் பிரெஞ்சுக்காரர்களின் நேர்முக ஆட்சி விரிவடைந்தது என பல வரலாற்று நிகழ்வுகள் வீராநாய்க்கர் காலத்தில் நிகழந்தன.

**இராசகோபால நாயக்கர் (வீராநாயக்கரின் மகன்)**

1. பதவி - இரண்டாம் நயினார்
2. பதவிக்காலம் - 1754 முதல் 1793 வரை
3. ஆளுநர் - கோதஹே, லெரி, லாசு மற்றும் தெபெலுக்கோம்பு.

வீராநாய்க்கருக்குப் பிறகு அவர் மகன் இராசகோபால நாய்க்கர் 1754-ஆம் ஆண்டு நயினார் 39 ஆண்டு காலம் பதவி வகித்தார். இவர் பணியில் இருந்த காலத்தில் புதுவையில் பல திருப்பங்கள் ஏற்பட்டன. புதுச்சேரி போரின்போது பீரங்கி சுடும் படைக்கு உதவியாளராக இருந்தவர்களுக்கு ஆணையாளராகவும் செயல்பட்டுள்ளார். இவரது அரிய பணியைப் பாராட்டி ஆளுநர்களும், அவருக்கு அடுத்தபடியாக உள்ளவர்களும் நற்சான்றிதழ் அளித்துள்ளனர். பிரெஞ்சியர்கள் மீது விசுவாசமாக இருந்தமையால் பல ஆண்டுகள் இரண்டாம் நயினார் பதவியை வகித்தார். இவரின் சேவையினை ரெனோ, தெபிரான், மொத்தே போன்ற பிரெஞ்சி அதிகாரிகள் மிகவும் பாராட்டியுள்ளனர். 1780-1781 காலகட்டத்தில் புதுவையில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தைச் சமாளிக்க பெரும்பாடுபட்டவர்என்பதுகுறிப்பிடத்தக்கது. இராசகோபாலநாய்க்கர்1793-ஆம்ஆண்டு இயற்கை எய்தினார். தந்தை இறந்தபின் அவரது பணியினை வாரிசுக்கு வழங்குதல் என்பது வழக்கம். இருப்பினும் இரண்டாம் வீராநாயக்கருக்கு தந்தையாரின் பணி கிடைக்கவில்லை.

**இரண்டாம் வீராநாய்க்கர்**

பதவிக்காலம் - இல்லை
பதவி - இல்லை
பிறப்பு - 1755
இறப்பு - 1827

இவரின் முழு தகவல்களும் இன்னும் அறியாத நிலையிலே உள்ளன. இவரின் தந்தையார் இராசகோபால நாய்க்கர் இறந்த பின் வீராநாய்க்கருக்கு தந்தையாரின் பணியான இரண்டாம் நயினார் பணி உடனடியாக கிடைக்கபெறவில்லை. 1793 இராசகோபால நாய்க்கர் இறப்பதற்கு முன்பாகவே ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சியர்க்கும் இடையே மாறிமாறி பல சண்டைகள் நிகழ்ந்த வண்ணம் இருந்தமையால் 1793 ஆம் காலக்கட்டத்தில் புதுச்சேரி ஆங்கிலேயரின் வசம் சேர்ந்ததன் காரணத்தால் தந்தையாரின் பணி இரண்டாம் வீராநாய்க்கருக்குக் கிடைக்கவில்லை. ஆதலால் நீண்ட காலமாகியும் நயினார் பதவியை வீராநாய்க்கர் வகிக்க முடியவில்லை அதுமட்டுமின்றி வறுமையில் வாடியுள்ளார்.

இரண்டாம் வீராநாய்க்கர் பிரெஞ்சியருக்கு எழுதிய கடிதத்தில் தனக்கு இரண்டாம் நயினார் பதவி அளிக்கும்படி வேண்டியுள்ளார். இதற்குப் பதில் கடிதமாக பிரான்சில் இருந்து கொமிசேர் சிவிலான துமோரியே அவருக்கு எழுதியதில், இரண்டாம் வீராநாய்க்கரின் முன்னோர்கள் செய்த சிறப்பான சேவையைக் கருத்தில்கொண்டு அவருக்கு 15 ரூபாய் உதவித்தொகையும், 2 காணி நிலமும் வழங்கப்பட்டதேயின்றி அவருக்கு “இரண்டாம் நயினார்” பதவி அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

**இரண்டாம் வீராநாய்க்கர் சிறப்புகள்**

இரண்டாம் வீரநாய்க்கர் தன் தந்தையாரின் பணி வகிக்காத நிலையிலும், அரசாங்கத்தோடு எவ்வித தொடர்பும் இல்லாதநிலையிலும்1778முதல்1792வரை 14 ஆண்டு காலம் புதுச்சேரியில் நிகழ்ந்த நிகழ்வுகள், பிரெஞ்சு அரசு தமிழ்நாட்டுடன் கொண்ட தொடர்பு, வட மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், மகராட்டிரம் மற்றும் வங்காளம் ஆகியவற்றுடன் கொண்ட தொடர்புகள், மூஸ்லீம் சிற்றரசர்கள் பிரெஞ்சியர், ஆங்கிலேயர் ஆகியோருடன் கொண்ட உறவுநிலை என ஒட்டுமொத்தச் செய்திகளை பதிவு செய்துள்ளார்.

இரண்டாம் வீரநாய்க்கர் ஆனந்தரங்கம் பிள்ளை போன்றே பன்மொழிப் புலமை மிக்கவர். தமிழ், பிரெஞ்சு, உருது, தெலுங்கு மற்றும் பாரசீகம் என ஐந்து மொழிகளை அறிந்த இவர் தன் புத்திக்கூர்மையாலும், தனித்திறமையாலும் நாட்குறிப்பினை செம்மைப்பட எழுதியுள்ளார். பலவிடங்களில் பிறமொழிச் சொற்களுக்குச் சரியான தூயத் தமிழ்ப் பதங்களைப் பயன்படுத்தியிருப்பது சிறப்பானது. அரசு பணியில் இல்லாத நிலையிலும் அவரது முழு ஆதரவும் பிரெஞ்சியர் வசமே இருந்தது. நாட்குறிப்பில் பிரெஞ்சியர்களைப் பற்றிய செய்தியைக் குறிப்பிடும்போது உபயோகிக்கும் தமிழ்நடையும், ஆங்கிலேயர் பற்றிய செய்தியை குறிப்பிடும்போது உபயோகிக்கும் தமிழ்நடையும் இதற்கு சான்றாக அமைக்கின்றன. அரியதொரு நாட்குறிப்பினை எழுதும் பணியில் தன்னை முழுமையாக ஈடுபத்திக்கொண்டு நாட்குறிப்பினைப் படைத்திருப்பதால் நாட்குறிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டிய தகுதிகள் அனைத்தும் ஒரு சேரப் பெற்றவராகத் திகழ்ந்துள்ளார்.

## இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பு எழுதக்காரணம்

இரண்டாம் வீரநாய்க்கருக்கு நாட்குறிப்பு எழுதும் எண்ணம் தானே தோன்றவில்லை. தமக்குத் தெரிந்த பிரெஞ்சுக்காரருக்கு இப்பழக்கம் இருந்திருப்பதை அவர் கவனித்திருக்கலாம். மேலும் தம் தந்தைக்குப் பழக்கமான ஆனந்தரங்கப்பப்பிள்ளையும் திருவேங்கடப்பிள்ளையும் நாட்குறிப்புகள் எழுதி வந்துள்ளதும் அவருக்குத் தெரிந்திருக்கலாம். "ஆனந்த ரங்கப்பப்பிள்ளையைப் போலவே தாம் காதால் கேட்ட சம்பவங்களும் கண்ணால் பார்த்த சம்பவங்களும் இந்நாட்குறிப்பை எழுதுவதற்கு அடிகோலிகளாக இருந்தன என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டிருக்கின்றார்" (ஓர் சே மா. கோபாலகிஷ்ணன், 1992: மேலது. : ப.xxii).

பிரெஞ்சியர் ஆட்சியில் எந்த அரசாங்கப் பணியிலும் இல்லாத ஒருவர் தெள்ளத் தெளிவான பல தகவல்கள் அடங்கிய நாட்குறிப்பினைத் தரமுடியாது. இரண்டாம் வீராநாய்க்கரின் தந்தையான இராசகோபால நாய்க்கர் வழி பல தகவல்களை அறியும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு, ஆனந்தரங்கப்பப்பிள்ளையின் காலத்தில் வாழ்ந்தவர் என்பதால் ஆனந்தரங்கரைப் போன்று தானும் நாட்குறிப்பு எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் செய்திகளை கூற இரண்டாம் வீராநாய்க்கர் பதிவு செய்தாரேயன்றி நேரடியாக அரசாங்க செய்தியைக் கண்டு பதிவு செய்யவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. 23 வயதில் நாட்குறிப்பு எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. சிறிய வயதில் மிகவும் லாவகமாகக் சொற்களைச் எளிமையாக கையாளப்பட்டிருக்க முடியமா என்பது யோசிக்கத்தக்க ஒன்றாகும்.

## நாட்குறிப்பின் உள்ளடக்கம்

18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியான கி.பி.1778 முதல் கி.பி 1792 வரையிலான காலக்கட்டத்தில் எழுதப்பட்ட இந்நாட்குறிப்பு 15 ஆண்டுகளில் 426 நாட்களுக்கு உரிய செய்திகள் மட்டுமே பதிவாகியுள்ளன. நாட்களும், மாதங்களும் தொடர்ந்த வரிசையில் இல்லாமல் இடையிடையே விடுபட்ட நிலையில் உள்ளன. இரண்டாம் வீரநாயக்கரின் நாட்குறிப்பைக் கண்டறிந்து அதை நன்கு நுண்ணாய்வு செய்து 320 பக்கங்கள் கொண்ட நூலாக ஓர்சே மா.கோபாலகிஷ்ணன் வெளியிட்டுள்ளார்.ஆனந்தரங்கப்பப்பிள்ளையின் மொழிநடையைவிட வீராநாய்க்கரின் மொழிநடை கடினமான ஒன்றாகும். பிரெஞ்சுக் கலப்பு மிகுந்து காணப்படுவதுடன் பேச்சுவழக்கை இவர் கையாளும்விதமும் விதியாசமான ஒன்றாகவே உள்ளது. இத்தகைய கடினமான நாட்குறிப்பினை ஓர்சே.மா.கோபாலகிஷ்ணன் நுண்மான்

நுழைவுபுலம் கொண்டு ஆராய்ந்து செய்திகளை ஒன்றுதிரட்டி பகுத்தாய்வு செய்து அவற்றைச் சீர்பட தொகுத்துப் பிழைகளை திருத்தம் செய்து கொடுத்தது மட்டுமின்றி நாட்குறிப்பில் உள்ள செய்திக்கு ஏற்ப அவற்றை நான்கு அத்தியாயங்களாகப் பிரித்துள்ளார். அவை:

1. புதுச்சேரி முற்றுகை
2. ஆங்கிலேயரின் ஆட்சி
3. பிரெஞ்சு முடியாட்சியின் கடைசி ஆண்டுகள்
4. புதுச்சேரிப் புரட்சி

இந்நூலின் முதல் அத்தியாயம் பிரெஞ்சு மொழியியல் எழுதப்பட்டிருந்ததை மக்கள் படிக்கும் வகையில் தமிழில் மொழிபெயர்த்து புதுச்சேரி முற்றுகை என்ற பெயரில் கொடுத்துள்ளார். நாட்குறிப்பில் ஐரோப்பிய முறை, தமிழ் முறை தேதிகள் சில தவறாகக் கொடுத்தது மட்டுமின்றி, நாட்குறிப்பில் கூறப்பட்டுள்ள செய்திக்கு ஏற்ப பல துணைத் தலைப்புகளிட்டுப் படிப்பவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் இவரது நாட்குறிப்பின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. மேலும் பதிப்பாசிரியர் நாட்குறிப்பின் பிற்பகுதியில் நிகழ்வுகள் எந்த நாளில், மாதத்தில், ஆண்டில் நிகழ்ந்தன என்பதைக் கால வரிசைப்படுத்தியும் நாட்குறிப்பில் இடம் பெற்றுள்ள மக்கள், இடம், கப்பல் போன்ற பெயர்களை அகரவரிசைப்படுத்தியும் கூறியுள்ளார்.

பல நாட்கள் நாட்குறிப்பே எழுதவில்லை. இரண்டாம் வீரநாய்க்கர் நாட்குறிப்பு (1778-1742) 15 ஆண்டுகளில் தினந்தோறும் நடந்த நிகழ்களைப் பதிவு செய்யவில்லை. ஆதலால் இது நாட்குறிப்பு என்னும் கருத்திலிருந்து விலகி நிற்பது போல் தோன்றுகிறது. வருடம்-15, மாதம்-126, நாள்-476 என்ற முறையில் அமைந்துள்ளது. காரணம் இவரின் தந்தையார் அரசாங்கத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து கூறாமல் இருந்திருக்கலாம். அல்லது வீராநாயக்கர் தனக்கு முடிந்த நேரத்தில் மட்டும் நாட்குறிப்பினை எழுதியிருக்கலாம்.

வரலாற்றாய்வாளன் கூறும் நிகழ்ச்சிகள் பெரும்பான்மையானவை நேரில் கண்டு அறியாதவை. நம்பகத்தன்மை என்று நம்பப்படும் சான்றுகள் வாயிலாக அக்காலத்திற்கு உரிய நிகழ்வுகளைப் பதிவு செய்தல் ஆகும். இரண்டாம் வீராநாய்க்கர் தன் நாட்குறிப்பில் தனிமனிதனைவிடச் சமுதாயம் என்னும் கூட்டத்திற்கு முக்கியத்துவம் தந்து அக்கால நிகழ்வுகளால் ஏற்பட்ட நன்மை, தீமை சார்ந்த கருத்துகளை ஆராய்ந்து இது வரை நிகழ்ந்துள்ளவற்றை வைத்துக்கொண்டு எதிர்காலத்தைத் தத்தம் விருப்பப்படி யூகித்துக்கொண்டு விடை தருபவராக இருந்துள்ளார். இரண்டாம் வீராநாய்க்கர் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த புதுச்சேரியின் நிலையினை ஆனந்தரங்கப்பிள்ளையின் வழி நின்று எழுதியுள்ளர் என்பதனை அறிய முடிகிறது. வரலாற்றைத் தொகுப்பாக மாற்றுவது சரியன்று. இருப்பினும் இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு, குறிப்பிட்ட சில செய்திகள் அடங்கிய வரலாற்றுத் தொகுப்பாகவே அமைந்துள்ளது. இரண்டாம் வீராநாய்க்கரின் நாட்குறிப்பில் (1778-1792) 15 ஆண்டுகள் அவ்வப்போது நடந்த நிகழ்வுகள் பதிவுச் செய்யப்பட்டுள்ளன. விரிவானதொரு ஆவணப் பதிவேடாக அமையாமல் செய்திக் குறிப்புகளைக் கொண்டிருக்கிறது என்பதைவிட சுருக்கமான குறிப்பாக விளங்குகிறது.

## துணை நின்ற நூல்கள்

1. ஓர்சே மா. கோபாலகிஷ்ணன். (1992). இரண்டாம் வீராநாய்க்கர் நாட்குறிப்பு, சென்னை,
2. தர்மராஜன், நா. (2006). *வரலாறு என்றால் என்ன?,* சென்னை, அலைகள் வெளியீட்டகம்.